# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/58—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/58 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பொதுப் பாதுகாப்பு க்கட்டளைச்சட்டம் (அதிகாரம் 40)

அவசரகால (வியாபார ஒழுங்குவிதி) ஒழுங்குவிதி ள் கட்டளை

**அவசரகால** (வியாபார ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியான தர்மசேன விஜேசிங்க ஆகிய நான் பருத்தி ஆடைவகைகளின் சகல வியாபாரிகளும் கீழே கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கேற்ப நடத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் :—

(அ) பருத்தி ஆடைவகைகளினது சகல பதிவுசெய்யப்பட்ட வியாபாரிகளும் தம்மால் விற்கப்பட்ட சகல பருத்தி ஆடைவகைகளின் பேரில் தமது கையிருப்புச் சரக்கின் நிலைமையை பாவனையாளர்கள் அறியும்பொருட்டு எந்நேரத்திலும் கண்காட்சியில் வைத்தல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட வியாபாரிகளால் கண்காட்சியில் வைக்கப்பட்ட பருத்தி ஆடைவகைகளின் கையிருப்பு நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு வாரத்தின் தொடக்கத்தின் போதும் திகதி வரைக்கும் கொண்டுவரப்பட்டு தமது வியாபார நிறுவனங்களிலும் அவசரகால (வியாபார ஒழுங்குவிதி) ஒழுங்குவிதிகளின் கீழ் கொடுக்கப்பட்ட உத்தரவுச்சீட்டுக்களில் காட்டப்பட்டவாறன கடைகளிலும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட வியாபாரிகளினால் உண்மையான கையிருப்புச் சரக்குடன் தொடர்புபடுத்தப்படல் வேண்டும்.

(இ) அவசரகால (வியாபார ஒழுங்குவிதி) ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டவாறு வியாபார நிறுவனங்கள், கடைகள் அல்லது பண்டசாலைகள் தவிர்ந்த வேறெந்த இடத்திலும் எவராலும் வைத்திருக்கப்படும் பருத்தி ஆடைவகைகளின் கையிருப்புத் தொகை கைப்பற்றப்படும்.

(ஈ) தமது வியாபார நிறுவனத்திலும் அல்லது கடைகளிலும் அல்லது பண்டசாலைகளிலும் கண்காட்சியில் வைக்கப்பட்டவாறன எந்த பதிவுசெய்யப்பட்ட வியாபாரியினால் வைத்திருக்கப்பட்ட எத்தகைய பருத்தி ஆடைவகைகளினதும் மேலதிகக் கையிருப்புத் தொகை கைப்பற்றப்படும்.

டி. விஜேசிங்க,
தகுதிவாய்ந்த அதிகாரி,
அவசரகால (வியாபார ஒழுங்குவிதிகள்)
ஒழுங்குவிதிகள்.

வியாபார அமைச்சு,
340, யூனியன் இடம்,
கொழும்பு,
1976 ம் ஆு டிசெம்பர் மீ 17 ந் உ.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது